
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**918**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

திரைக்கதை வசனம்
# கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

**22**

# மணமகள்;
# மாற்றத்தைப் பேசிய பெண்கள்!



படங்கள் உதவி: ஞானம்



**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

1951-ஆம் ஆண்டு வெளியான, **'மணமகள்'** திரைப்படத்தில் பெண்களை காமப் பதுமைகளாகக் கருதும் ஆணாதிக்க சிந்தனைக்கு எதிராக பேனாவை சுழற்றியிருப்பார் கலைஞர். படத்தில் வருகின்ற மூன்று பெண்களுமே தங்களுக்கான வாழ்க்கைத் துணையை அடைய, திருமணம் எனும் பந்தத்திற்குள் விழுந்தாலும், அந்த பந்தம் தங்களை அடிமைப்படுத்தும்போது அதை எதிர்த்துப் போராடவும், தாங்கள் விரும்பிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் செய்கின்றனர். 1951-ஆம் ஆண்டில் இவ்வாறான கதையையும், அதற்கு கத்திமுனை போன்ற திரைக்கதை, எழுச்சி மிகுந்த வசனங்களை எழுதவும் பெரும் துணிச்சலும், சமூக மாற்றத்தின் மீது நம்பிக்கையும் கொண்டிருந்தால் மட்டுமே சாத்தியமாகும்.

அன்றைய சமூகத்தில், வயதானவர்களுக்கு இளம் பெண்களை இரண்டாம், மூன்றாம் தாரமாகக் கட்டி வைக்கும் கொடுமை இருந்தது. கிழவனான கணக்குப் பிள்ளையின் இரண்டாம் தாரமாக வரும் இளம்பெண்ணின் மனத் துயரங்களை அத்தனை அழுத்தமாகப் பதிவு செய்திருப்பார் கலைஞர். குறிப்பாக, அப்பெண்கள் அனுபவித்த, வெளியே சொல்ல முடியாத ஒட்டுமொத்த துயரத்தை, ஏக்கத்தை எல்லாம் கலைஞர் தன் சொற்களில் வெளிப்படுத்தினார். என்.எஸ்.கே அவர்கள் கலைஞருக்குக் கொடுத்த முழுமையான சுதந்திரம், சிறப்பான வசனங்களைக் கொண்டு வந்தது.

வயதான கணக்குப்பிள்ளையின் இளம் மனைவியை அறிமுகப்படுத்தும் காட்சி இது..

**பரமானந்தம்:** பாகவதர் இது யார் தெரியுமா? கணக்குப்பிள்ளையோட

**பாகவதர்:** மகளா?

**பரமானந்தம்:** சிரித்துக்கொண்டே .... மகளாவது! கணக்குப் பிள்ளையோட இளைய தாரம். என்கிறார்.

இந்த இடத்தில் பார்வையாளர்கள் அவர்களாகவே ஒரு முடிவுக்கு வர முடியும்.

மற்றொரு காட்சியில் கணக்குப் பிள்ளை வீட்டுக்குள் நுழைகிறார். அப்போது இளம் மனைவி விஜயா தன்னை அலங்காரம் செய்து கொண்டிருக்கிறார்

**கணக்குப் பிள்ளை:** பொழுது விடிஞ்சு பொழுது போனால் அலங்காரம் செய்துகொள்ளவே நேரம் சரியா இருக்கும் போல் இருக்கே

**விஜயா:** வேறு சந்தோசமான நேரம் எனக்கு என்னதான் இருக்கு?

**க. பிள்ளை:** ம்கூம்... ஒரே தடபுடலா அலங்காரம் பண்ணிக்கிறியே இப்ப யாரு பார்த்து ரசிக்கப் போறா?

**விஜயா:** அதான் யாரும் இல்லையே! நானே கண்ணாடில பார்த்துக்கிற வேண்டியது தான்.

**க.பிள்ளை:** நான் சம்பாரிக்கிறது பூரா இந்த எழவுக்கே சரியா இருக்கும் போலவே!

**விஜயா :** எழவா? ஒரு இளம் மனைவிக்கு இப்படியாவது ஒரு இன்பம் இருக்கக்கூடாதா?

**க.பிள்ளை:** இது தான் இன்பமா? முகத்துக்குப் பவுடர், கண்ணுக்கு மையி, உதட்டுக்குச் சாயம்! ஏன் பல்லுக்கு கொஞ்சம் சுண்ணாம்பு அடிக்கிறதுதானே?

எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு உன் மூஞ்சியில கரியை வாரிப் பூசிருவேன். என்பார் கணக்குபிள்ளை..

**விஜயா:** பிறகென்ன, பூனைக்கு வீணையா வாசிக்கத் தெரியும் பானைய உருட்டத்தானே தெரியும்.

**கணக்குப் பிள்ளை:** குடும்பப்பெண்ணா யோக்கிதையாவா பேசுற நீ? இப்படியெல்லாம் அலங்காரம் பண்ணிட்டு எங்க கௌம்பிட்ட?

**விஜயா:** பாட்டு கத்துக்கப் போறேன்

**க.பிள்ளை:** இதுக்கு நீ உங்கம்மா வீட்டுலயே இருந்துருக்கலாம்

**விஜயா:** எனக்கு எங்கிருந்தாலும் ஒண்ணு தானே.... என்று இளம்பெண்ணின் நிலையைச் சொல்லியிருப்பார்.

### கவனிக்க வைத்த காட்சி

இறுதியில் பாகவதருக்கும் ராதாவுக்கும் இடையிலான உரையாடல், அன்றைய சினிமாக்களை கவனிக்க வைத்த காட்சியாகும்.

**ராதா :** கொலைகாரப்பாவி இன்னும் யாரைக் கொல்ல வந்திருக்கே? என் கண்ணன் அழகிரி உயிரைக் குடிச்சவனே நிக்காதே, போய்விடு

**பாகவதர் :** ஆத்திரத்தில் அறிவிழந்து ஏதேதோ செய்துவிட்டேன்... அழகிரியின் சாவைக் கேட்டு நான் எவ்வளவு அழுதேன் தெரியுமா? கண்ணே அழகிரி..

**ராதா:** அழகிரியைப் பற்றிப் பேசாதே அவனைப் பத்திப் பேச உனக்கு யோக்கியதை இல்லை.

**பாகவதர்:** (அழகிரி போட்டோவை கையில் எடுத்து) கண்ணே அழகிரி, உன் அம்மா முகத்தைப் பாரடா, நீ மட்டும் இருந்திருந்தால்...

**ராதா :** உன் மானம் பறிபோயிருக்கும். உன் கைகளால் அவன் படத்தைத் தொடாதே சீ...

இந்த உரையாடலில் பெண்களை ஏமாற்றும் பாகவதர் போன்ற ஆட்களைக் கடுமையாக சாடியிருப்பார் கலைஞர்...

> அன்றைய பெண்கள் மத்தியில் கலைஞரின் வசனங்கள் எத்தகைய உணர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் என்பதையும் சிந்தித்துப் பார்க்கும்போது கலைஞரின் எழுத்து, தமிழ்ச் சமூக மாற்றத்தில் வகித்த பங்கை நம்மால் உணர முடிகிறது.

### பாகவதர் – சந்திரன் உரையாடல்

அதேபோல குமாரியை பாகவதர் மயக்க முனையும் காட்சியில் சந்திரன் பேசும் வசனங்களும் கவனிக்க வைத்ததாக இருந்தது.

இறுதியில் பாகவதரைச் சந்திக்க, சந்திரன் குமாரியின் வீட்டுக்கு வருகிறான். அங்கு பாகவதருக்கும் சந்திரன், குமாரி ஆகியோருக்கும் இடையில் நடக்கும் உரை யாடல் காட்சியில்....

**பாகவதர்:** சபாஷ் லாயர் சார், ஒரு பெண்ணிடம் புருசன் இல்லாத சமயத்தில் தனித்துப் பேசுவதுதான் இலண்டன் படிப்பின் லட்சணமா?

**சந்திரன்:** பாகவதரே

**பாகவதர்:** இவர் பாகவதரல்ல ! பாபநாசம் சீமான்.

**சந்திரன்:** சீமானின் வாழ்க்கை முகாரியில் ஆரம்பித்து மோகனத்திற்கு வந்திருக்கிறது. மோகனத்தின் முதல் வரியே கணக்குப் பிள்ளைக்கு முடிவுகட்டிவிட்டது இல்லையா பாகவதரே?

**பாகவதர்:** என்ன அளக்கிறாய்?

**சந்திரன்:** அளக்கவில்லை. அபாய அறிவிப்பு, முதல் எச்சரிக்கை.

**பாகவதர்:** அதைத்தான் நானும் உன்னிடம் திருப்பிச் சொல்கிறேன். சந்திரா நீ ஒரு வக்கீல், வெறும் வார்த்தையோடு விளையாடு கிறாய். நான் ...

**சந்திரன்:** வஞ்சகன். குமாரியின் வாழ்க்கை யோடு விளையாடுகிறாய்.

**பாகவதர்:** சந்திரா! குமாரியைப் பற்றிப் பேசாதே அவள் என் மனைவி

**சந்திரன் :** எனக்குப் பேச பாத்தியம் இருக்கிறது...... பாகவதா ஒரு விதவையின் வாழ்க்கையை விஷத்தோட்டமாக்கினாய் குடும்பப்பெண் ஒருத்தியின் கற்பைச் சிதைத்தாய் குமாரியின் நெஞ்சத்தைக் குமுறும் எரிமலை யாக்கினாய்.

**பாகவதர்:** சந்திரா

**சந்திரன்:** பாரடா பாவி, என் குமாரியைப் பார் கொந்தளிக்கும் கடல், கொதிக்கும் கொப்பரை, சுழன்றடிக்கும் சூறாவளி இவைகளுக்கெல்லாம் கூட அமைதி உண்டடா அக்கிரமக்காரா, குமாரியின் உள்ளத்திலே அமைதியை அடியோடு அழித்துவிட்டாயே பாவி.

**பாகவதர்:** கடைசி முறையாகச் சொல்கிறேன் குமாரியைப் பற்றிப் பேசாதே

**சந்திரன்:** பேசுவேன் என் குமாரி மனமிழந்த மலரா, மங்கிய நிலவா? முடியாது... அதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று அனல் தெறிக்கும்.

சமூகத்தில், அதிலும் குறிப்பாக அன்றைய பெண்கள் மத்தியில் கலைஞரின் வசனங்கள் எத்தகைய உணர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் என்பதையும் சிந்தித்துப் பார்க்கும்போது கலைஞரின் எழுத்து, தமிழ்ச் சமூக மாற்றத்தில் வகித்த பங்கை நம்மால் உணர முடிகிறது.

**...காட்சி விரியும்**

## விளிம்பு நிலை மாணவர்களை உயர்த்தும் திராவிட மாடல்!

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளுக்கு, திராவிட மாடல் அரசு அளிக்கும் முக்கியத்துவத்தால், விளிம்பு நிலை சமூக மாணவர்கள், புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் அதிகம் சேர்ந்து வருவதாகப் பாராட்டியுள்ளார் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன்.

இதுதொடர்பாக, தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்ற 136 மாணவ மாணவிகள் சிறப்பு வாய்ந்த ஐ.ஐ.டி, என்.ஐ.டி., என்.ஐ.எஃப்.டி., எஃப்.டி.டி.ஐ. (IIT, NIT, NIFT, FDDI) போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் சேரப் போகிறார்கள். கடந்த ஆண்டுகளில் ஏற்கனவே சேர்ந்தும் இருக்கிறார்கள். இது மிகப்பெரும் சமூகநீதிச் சாதனை. கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தப் பள்ளிகளின் உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு, கல்வியின் தரத்திலும் கூடுதலாக கவனம் செலுத்தப்பட்டது.

உளவியல் ரீதியாக, அவர்களுக்குத் தன்னம்பிக்கை, கவுன்சிலிங் வழங்கப்படுகின்றன. இந்தச் சாதனைக்குப் பின்னால், அரசின் தொடர் முயற்சிகளும் செயல்பாடுகளும் இருக்கின்றன. அத்துடன் க்ளாட் (CLAT) மற்றும் க்யூட் (CUET) நுழைவுத் தேர்வுகளுக்கு ஏற்கனவே தேர்வு எழுதி தேர்ச்சிபெற்ற மாணவர்களைக் கொண்டே பயிற்சி அளிக்கும் புதிய முயற்சியும் தொடங்கி, நடைபெற்று வருகிறது.

உயர்கல்விச் சேர்க்கைக்குப் பின்னரும் அக்கல்வி நிறுவனங்களின் தன்னார்வ வழிகாட்டுநர் (Mentorship) மூலமாக, தமிழ்நாடு அரசு அந்த மாணவர்களை வழிநடத்தி வருகிறது. இந்த ஆண்டு தேர்ச்சிபெற்ற மாணவர்களைப் பாராட்டி, சான்றிதழ்களையும் மடிக்கணினிகளையும் வழங்கியிருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். விளிம்பு நிலை சமூகச் சூழலில் இருந்து வரும் மாணவர்களை, புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களை நோக்கி அழைத்துச் செல்ல முடியும் என்று நிரூபித்து இருக்கிறது, திராவிட மாடல் ஆட்சி!" எனப் பாராட்டியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### பொற்கிழி வழங்கிப் பெருமை சேர்த்த தலைவர்!



என்.முரளிகிருஷ்ணன்

எனது தந்தை நாகரத்தினம் அவர்கள், கழகத்தின் தீவிர தொண்டர். 1953- ஆம் ஆண்டு கல்லக்குடிப் போராட்டத்தில், கலைஞருடன் கலந்துகொண்டு சிறை சென்றவர். அவருடைய கழகத் தொண்டைப் போற்றும் வகையில், 2006-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர்- இன்றைய நம் தலைவர் அவர்களின் கைகளால் 25,000 ரூபாய் பொற்கிழி வழங்கினார். நான் அப்போது நன்னிலம் ஒன்றிய மீனவர் அணிச் செயலாளராக இருந்தேன். நிகழ்ச்சியில் முதன்மைச் செயலாளர் அண்ணன் கே.என்.நேரு, கழகத் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் திருச்சி சிவா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**– என்.முரளிகிருஷ்ணன்,**
**திருச்சி கோட்ட தொ.மு.ச. துணைச் செயலாளர்,**
**நன்னிலம், திருவாரூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மேத்தாவுக்குக் கருப்புக் கொடி!

1951-ஆம் ஆண்டு தமிழ்நாடு வந்த ஒன்றிய அமைச்சர்கள் பலருக்கும், தமிழ்நாடு எங்கும் கழகம் கருப்புக்கொடி காட்டும் போராட்டம் நடத்தியது. ஜனவரியில் ஒன்றிய அமைச்சர் மேத்தா, தமிழ்நாடு வருகை தந்தபோது சென்னை, கோவை, திருச்சி, மதுரை என பல நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131